முதன்மை இயக்குநர் நெடுஞ்சாலை, கிண்டி, சென்னை—25, அவர்களின் செயல்முறைகள்
<u>பிறப்பிப்பவர்: திரு.ரெ.கோதண்டராமன் எம்.இ.,</u>

<u>செயல்முறை ஆணை எண்.7350 /நிர் 1(1)/ 2017 நாள்:04.07.2017</u>

பொருள் : பணியமைப்பு – நெடுஞ்சாலைத்துறை – உதவிப் பொறியாளர்கள்/ இளநிலைப்பொறியாளர்கள் – தற்காலிகமாக உதவிக் கோட்டப் பொறியாளராகப் பதவி உயர்த்தி பணியமர்த்தல் ஆணை வழங்குதல்

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்.40, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.1) துறை. நாள் : 05.06.2017

2. அரசாணை (3டி) எண். 23, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.1) துறை, நாள். 07.06.2017.

*****

பார்வை 2ல் உள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகளை தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதி 47(1) மற்றும் தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் பணி விதிகளில் விதி 3(4) –ன்படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 7 உதவிப் பொறியாளர்கள்/இளநிலைப் பொறியாளர்கள், தற்காலிக அடிப்படையில் தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியியல் பணி வகை எண். 4ல் நிலவிடும் உதவிக் கோட்டப் பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு / பணியமர்வு செய்யப்பட்டு, அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்திற்கு பணியமர்த்தப்படுகிறார்கள்.

இப்பதவி உயர்வு முற்றிலும் தற்காலிக அடிப்படையில் அளிக்கப்படுகிறது என்றும், எதிர்காலத்தில் உதவிக் கோட்டப் பொறியாளர் பதவியில் முறையான பதவி உயர்வுக்கோ, முதுநிலைக்கோ உரிமை கோருவதற்கு எவ்வித உரிமையும் இது அளிக்காது என்றும், முன்னறிவிப்பு ஏதுமின்றி இப்பதவி உயர்வு விலக்கிக் கொள்ளப்பட்டு, கீழ்ப்பதவிக்கு எந்நேரத்திலும் தகுதியுடைய அதிகாரியால் பணியிறக்கம் செய்யப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பதவி உயர்வு, நீதி மன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளில் வழங்கப்படவுள்ள இறுதி தீர்ப்பாணைக்கு உட்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசு கடித எண்.8119/FR III/1980 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள்.30.04.1980–ன்படி உதவிக் கோட்டப் பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு / நியமனம் பெற்ற உதவிப் பொறியாளர்கள் / இளநிலைப் பொறியாளர்களின் ஊதியத்தை நிர்ணயிக்க ஏதுவாக அவர்கள் உதவிக் கோட்டப் பொறியாளர் பதவிக்கு தேவையான அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்கின்றனர் எனச் சான்றளிக்கப்படுகிறது.

பதவி உயர்வு பெறும் உதவிப் பொறியாளர்கள்/இளநிலை பொறியாளர்கள் உரிய அலுவலர்களிடமிருந்து முறையாக விடுவிப்பு பெற்றுக்கொண்டும், சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர் / கண்காணிப்புப் பொறியாளர் அவர்களிடம் மறுபணியமர்வு ஆணையைப் பெற்றுக்கொண்டும், குறைந்தபட்ச பயணக் காலத்தை மட்டும் பயன்படுத்தி, புதிய பணியிடத்தில் உடனடியாக பணியில் சேருமாறு பணிக்கப்படுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்கள் / கோட்டப் பொறியாளர்கள் பதவி உயர்வில் உதவிக் கோட்டப் பொறியாளர்களாக பணியில் சேர உள்ள அலுவலர்களை உடனடியாக விடுவித்தும், மறுபணியமர்வு ஆணைகள் வழங்கியும், அவர்கள் உடன் பணியில் சேர தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்கள் / இளநிலைப் பொறியாளர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன், புதிய பணியிடத்தில் சேராமல் விடுப்பில் சென்றால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தற்போது அளிக்கப்படும் இத்தற்காலிக பதவி உயர்வை விலக்கிக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு : பிற்சேர்க்கை**

**ரெ.கோதண்டராமன்**
**முதன்மை இயக்குநர்**
**நெடுஞ்சாலை**

**பெறுநர்,**

சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளர்கள் / இளநிலைப் பொறியாளர்கள்

சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர் (நெ)கள், கண்காணிப்புப் பொறியாளர் (நெ)கள் மற்றும் கோட்டப் பொறியாளர் (நெ)கள் மூலமாக

**நகல்.**

1. அரசு செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
2. சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்கள் / கோட்டப் பொறியாளர்கள்
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், சென்னை

உண்மை நகல் / உத்தரவுப்படி / அனுப்பப்படுகிறது

கண்காணிப்பாளர்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, கிண்டி, சென்னை–25.
அவர்களின் செயல்முறை ஆணை எண். 7350/நிர்.1 (1) /2017, நாள்.04.07.2017 –ன் பிற்சேர்க்கை

| வ. எண். | பெயர், பதவி மற்றும் தற்போதைய பணியிடம் திருவாளர்கள் / திருமதியர்கள் | பிறந்த தேதி / சொந்த தாலூகா | பதவி உயர்வில் உதவிக் கோட்டப் பொறியாளராக பணியமர்த்தப்படும் பணியிடம் |
|---|---|---|---|
| 1 | எல்.ரமேஷ்<br>இளநிலைப் பொறியாளர்<br>திண்டுக்கல் (நெ) ந(ம)கி.சா.பிரிவு | 24.01.1965<br>பெரியகுளம் | திருவாடானை (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு உட்கோட்டம் |
| 2 | ஆர்.செல்வராஜ்<br>உதவிப் பொறியாளர்<br>செந்துரை (நெ) க(ம)ப பிரிவு | 03.06.1967<br>வேப்பந்தட்டை | குன்னம் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டம் |
| 3 | எஸ்.மல்லிகா<br>உதவிப் பொறியாளர்<br>மதுரை (நெ) மண்டல ஆய்வகம் பிரிவு | 01.06.1970<br>மதுரை வடக்கு | மானாமதுரை (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு உட்கோட்டம் |
| 4 | எம்.ஜெயக்குமார்<br>உதவிப் பொறியாளர்<br>காஞ்சிபுரம் (நெ) திட்டங்கள் பிரிவு | 21.09.1977<br>அம்பத்தூர் | சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட உட்கோட்டம் – 11 |
| 5 | கே.இராஜாமணி<br>இளநிலைப் பொறியாளர்<br>பரமக்குடி (நெ) திட்டங்கள் பிரிவு | 18.02.1962<br>சிவகங்கை | தேவக்கோட்டை (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டம் |
| 6 | கே.பாலாஜி<br>உதவிப் பொறியாளர்<br>தஞ்சாவூர் (தே.நெ) பிரிவு 2 | 31.05.1970<br>கீழ்வேலூர் | சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட உட்கோட்டம் – 5 |
| 7 | ஜி.மகேஸ்வரன்<br>உதவிப் பொறியாளர்<br>த.நா.சா.உ.மே.க (அயற்பணி) | 25.03.1973<br>காட்டுமன்னார்கோவில் | ஸ்ரீபெரும்புதூர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டம் |

ஒம்/–
திரு.ரெ.கோதண்டராமன்,
முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலைத்துறை

//உண்மை நகல் // உத்தரவின்படி // அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்